21.06.2023 CC.169/2012 PW.5 திரு. சுந்தரதாஸ்

**கடந்த 03.02.2021ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற Crl.M.P. No. 1771/2021, dated 15.09.2021ன் படி கு.வி.மு.ச 1973 பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மையான கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. எனது வீடு குளச்சலில் நரிக்கல் என்ற பகுதியில் உள்ளது என்று சொன்னால் - சரிதான். எனது வீட்டிற்கும் ஆலஞ்சிக்கும் இடையே எத்தனை கி.மீ தொலைவு இருக்கும் என்றால் சுமார் 5 கி.மீ தொலைவு இருக்கும். நான் முழு நேர ஓட்டுனர் என்றால் சரிதான்.

2. குளச்சல் காமராஜர் பேருந்து நிலையத்தில் என்னுடைய வாகனம் நிறுத்தப்பட்டிருக்கும். நான் டிராவல்ஸ் நிறுவனம் நடத்தி வரவில்லை. என்னை போலீசார் விசாரிக்கும்போது நான் டிரைவர் என்ற விவரத்தைச் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. நானும் சுந்தர்சிங்கும் குளச்சலில் இருந்து சேர்ந்து ஆலஞ்சிக்கு சென்றோமா என்றால் - இல்லை. நான் ஆலஞ்சிக்கு எதில் சென்றேன் என்றால் எனது காரில் சவாரி சென்றிருந்தேன். நான் குளச்சலில் இருந்து எத்தனை மணிக்கு சென்றேன்என்றால் ஒருடெலிவரி கேசிற்காக 6.00 - 06.15 மணிஅளவில் சென்றேன். எந்த ஊருக்குசென்றேன் என்றால் ஆலஞ்சிக்கு தான் சென்றேன்.

4. சுந்தர்சிங்கை நான் எங்கு வைத்து பார்த்தேன் என்றால் நான் ஆலஞ்சியில் டீ குடிப்பதற்காக இறங்கியபோது சுமார் 07.00 மணி அளவில் பார்த்தேன். முத்தூட் வங்கி இருக்கும் சாலை எங்குள்ளது என்றால் கருங்கல் செல்லும் சாலையில் உள்ளது. சுந்தர்சிங் எனக்கு உறவினர் அல்ல, பழக்கம் உடைய நபர். சுந்தர்சிங் டாஸ்மார்க் கடையில் பணியாற்றி வந்தார் என்றால் எனக்குத் தெரியாது.

5. நான் டிரைவர் இல்லை என்றாலும் மேற்படி சம்பவ காலத்தில் நான் டிராவல்ஸ் நிறுவனம் நடத்தி வந்தேன் என்றால் - நான் டிராவல்ஸ் வைக்கவில்லை. இரண்டு வண்டி வைத்துள்ளேன். ஒரு வண்டியை நானும் ஒரு வண்டியை டிரைவர் வைத்தும் ஓட்டுகிறேன்.

6. நான் சொன்ன நேரத்தில் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சொன்ன விதத்தில் எந்த ஆவணத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் நான் குளச்சல் பேருந்துநிறுத்தம் அருகே எனது டிராவல்ஸ்சில் அமர்ந்திருந்தேன் என்று சொன்னால் - சரியல்ல.

7. ஆலஞ்சி பேருந்து நிறுத்தத்திற்கும் முத்தூட்நிறுவனத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 50 அடி தொலைவு இருக்கும். நான் போலீசார் கேட்டுக்கொண்டதின் பேரில் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துக் கொடுத்தேன் என்றாலும், சுந்தர்சிங் எனக்கு வேண்டப்பட்டவர் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை- முடிக்கப்பட்டது.

---

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.